விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 31 ஷவ்வா 5 இதழ் 123
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 14-6-1986

சர்வகட்சி மகாநாடு

## த.வி.கூ.க்குவிடுத்தஅழைப்பை நீலன் தமிழகம் அனுப்பினர்

[கொழும்பு]

இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளசர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசாங்கத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

இந்த அழைப்பு கூட்டணி பிரமுகர் கலாநிதி நீலன் திருச்செல்வத்தினால் சென்னையிலுள்ள கூட்டணி அரசியற்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு தினங்களில் இம்மாநாட்டில் கலந்துகொள்வது பற்றி கூட்டணி முடிவெடுக்கும் என கலாநிதி நீலன் 'ஈழநாடு'வுக்குத்தெரிவித்தார்

அரசாங்கத்தினால் கூட்டப்படவுள்ள இம்மாநாட்டுக்கு இலங்கையிலுள்ள ஏனைய அங்கீகரிக்கப்பட்ட அரசியல் சட்சிகளுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

25ம்திகதி மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளஇம் மாநாட்டில். ஒவ்வொரு கட்சியிலிருந்து மூன்று பிரதிநிதிகள் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ய-செ)

### கப்பல்கள்

[சுண்டுக்குளி]

கொழும்புத் துறைமுகத்திலிருந்து 950 தொன் எடையுள்ள மாவை ஏற்றிக்

(5ம் பக்கம் பார்க்க)

மூதூரில் நேற்று

# இரு முஸ்லிம்கள் உட்பட 25 தமிழ் அகதிகள் படுகொலை

(அலுவலக நிருபர் ஏ.வி. மாணிக்கம்)

மூதூரில் உணவு முத்திரைகளைப் பெற்றுக் கொண்டு மாட்டுவண்டிகளில் வந்து கொண்டிருந்த 25 அகதிகள் மூர்க்கத்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 23 பேர் தமிழர்கள். இருவர் முஸ்லிம்களாவர். ஊர்காவற்படைக் கும்பல் ஒன்றே நேற்றுக் காலை இப்படுகொலைகளைப் புரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் தொகுதியிலுள்ள கதிரவெளி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உணவு முத்திரைகளும், அகதிகளுக்கான உணவுப் பொருள்களும் எடுத்துக் கொண்டு மாட்டு வண்டிகளில் சென்ற தமிழ்-முஸ்லிம் (ஆண்-பெண்) அகதிகள் 25 பேர் ஊர்காவல்படையினரால் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இப்படுகொலைச் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரை தப்பித்துக்கொண்ட மேலும் இருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு பெரும் சிரமத்தின் மத்தியில் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

நேற்றுக்காலை இப்பரிதாப படுகொலைச் சம்பவம் இடம் பெற்றது.

மூதூர் பூமரத்தடி என்னும் இடத்தில் உள்ள அகதிகள் முகாமில் இருந்தவர்களுக்கே இக்கதி நேர்ந்தது.

கணேசமூர்த்தி, சோமசுந்தரம் ஆகிய இருவருமே படுகாயங்களுக்குள்ளானவர்கள். இவர்களை பலத்த சிரமத்தின் மத்தியில், உயிர் தப்பிய இருவருள் ஒருவரான ஏ. செலவராசா என்பவரே காட்டுப்பாதைகளுக்கு ஊடாக வெருகலால் வாகரைக்கு கொண்டுவந்தார். பின்னர் கத்தோலிக்க மதகுரு ஒருவரிடம் இவர்கள் தஞ்சம் புகுந்தனர். படுகாயமடைந்த இருவரையும் மட்டக்களப்பு ஆஸ்பத்ரியில் மதகுரு சேர்ந்தார் இவ்விருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

இச் சம்பவம்பற்றி மேலும் கூறப்படுவதாவது:

நேற்றுக்காலை அகதிகள் முகாமிலிருந்து ஈச்சிலம்பத்தை ஊடாக 25 பேருக்கு மேல் ஆண்களும், பெண்களுமாக 5 மாட்டுவண்டிகளில் கதிரவெளி உதவி அரசாங்க

(5ம் பக்கம் பார்க்க)

### வவனியாவில் 5பேர் விடுதலை

[வவனியா]

வவனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டவர்களில் ஐவர் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

சி. மோகச்சந்திரன், க. சுகந்தன், எம். மனோகரன், எஸ். முத்துலிங்கம், எஸ். அருள்நேசன்;

இவர்கள் வன்னி ஆயுதப் படை முகாமில் வைத்து விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

இங்கு தடுத்து வைக்கப்பட்டவர்களில் மேலும் பலர் விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

போராளிகளுடன் பேச

## விஜயகுமா ரணதுங்க மட்டும் தமிழகம் செல்வார்?

[கொழும்பு]

தமிழகத்திலுள்ள தமிழ்ப் போராளிகள் குழுக்களை சந்தித்துப் பேச்சு நடத்தவென இலங்கையிலிருந்து செல்லவுள்ள இடதுசாரிக்கட்சிகளின் குழுவில் இலங்கை மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு.விஜய குமாரதுங்க மட்டுமே அங்கம் வகிப்பார் எனத் தெரியவருகிறது.

சம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஆகியவையும் தமது பிரதிநிதிகளை தமிழகம் அனுப்பும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவை தமது முடிவை மாற்றிக்கொண்டு விட்டன என நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

தமிழ் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை யுத்தநிறுத்தத்திற்கு இணங்கச் செய்ய ஒரு இடதுசாரி குழுவொன்றை தமிழகத்துக்கு அனுப்ப ஜனாதிபதி ஜயவர்த்தன அங்கீகாரமளித்திருந்தது தெரிந்தே. [ய-செ]

### அரசஊழியர்கள் கிளிநொச்சி சென்றனர்

[சுண்டுக்குளி]

கிளிநொச்சியில் பணிபுரியும் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் அங்கு புறப்பட்டுச் சென்றார்கள்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் செய்த ஏற்பாடுகளைத் தொடர்ந்து யாழ். கச்சேரியில் இருந்து கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்திலுள்ள திணைக்களங்களில் பணிபுரியும் சுமார் எழுபத்தைந்துக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் இ.போ.ச, பஸ் வண்டி மூலம் சென்றுள்ளனர்.

இவர்கள் அங்கு சென்று தத்தமது அலுவலகங்களில் தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் திரும்பவும அதே பஸ்ஸில் யாழ்ப்பாணம் திரும்புவார்களென தெரிவிக்கப்பட்டது.

## வெடிகுண்டு ஆணையாளராக லயனல் பெர்ணண்டோ?

[கொழும்பு]

தென்னிலங்கையில் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கென விசேஷ பாதுகாப்பு ஆணையாளராக முன்னாள் யாழ். அரச அதிபரும் தற்போது கப்பல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் உள்ள திரு. லயனல் பெர்ணண்டோ நியமிக்கப்படலாமென மிகவும் நம்பகரமான வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது

பொது இடங்களான விமான நிலையங்கள், துறைமுகங்கள், ரயில் நிலையங்கள், அரசாங்க அலுவலகங்கள். போன்ற இடங்களின் பாதுகாப்பை பலப்படுத்தி மக்களைக் காப்பாற்றுவதே இவரின் பிரதான கடமையாக இருக்குமெனவும் தெரியவருகிறது.

இவரின் நியமனம் ஜனாதிபதியினால் இன்னும் சில வாரங்களில் உறுதிட்படுத்தப்படும். [ய-செ]

### கொழும்பு நகர மண்டபத்தில் குண்டுப் புரளி

[கொழும்பு]

கொழுபபு நகர மண்டபத்தில் நேற்றுக் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு பதற்றம் நிலவியது. இதையடுத்து அங்கிருந்த ஊழியரனைவரும் வெளியேற்றப்பட்டு மண்டபம் சோதிக்கப்பட்டதாயினும் அங்கு குண்டெதுவும் காணப்படவில்லை

இதனையடுத்து நகரமண்டப ஊழியரனைவரும் அரை நாளுடன் தத்தமது வீடுகளுக்குச் சென்றனர். (ய-செ)

வவனியாவில்

## சிவில் நிர்வாக இணைப்பதிகாரி

[வவனியா)

வவனியா மாவட்டத்தி சிவில்நிர்வாகத்துக்கும் ஆயுதப் படையினருக்கும் தொடர்பேற்படுத்துவதறகு சிவில் நிர்வாக இணைப்பதிகாரி ஒருவர் நியமிககப்படவுள்ளார்.

அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளால்வடக்குக்-கிழக்குப் பகுதியில் சிவில் நிர்வாகம் ஸ்தம்பித்திருப்பது தெரிந்ததே.

வவனியா மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் அமுல்படுத்தும்போது ஏற்படும் பிரச்னைகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுபபதற்கென நியமிக்கப்படவுள்ள சிவில் நிர்வாக அதிகாரி தமது அதிகாரங்களைப் பயன்படுத்துவார்.

சிவில் நிர்வாக அதிகாரியின் பணிமனை மாவட்ட இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் இயங்கவுள்ளது. மா]

### பகல் பாதுகாப்புச்சேவை பொலிஸ்காரர் மயக்கம்

(வவனியா)

வவனியா நகரில்பகல் வேளைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவென புதிய பொலிஸ் பிரிவொன்றுஅமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 300 பேர் புதிய

[5-ம் பக்கம் பார்க்க]

## வல்வையில்இராணுவத்தினர் மாற்றம்

(வல்வெட்டித்துறை)

நேற்று அதிகாலை 5 30 மணிசளவில் வல்வை பகுதியை ஹெலிகொப்டர் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டது. அதைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் 2வள்ளங்களும், 3 பிளாஸ்ரிக் படகுகளும் 5 கடற்படைப் பீரங்கி விசைப் படகுகள் சகிதம் மேற்குத் திசையிலிருந்து வந்து வல்வை இராணுவ முகாமுக்கு நேராகநிலைகொண்டன.

பின்னர் பாரியகடற்படைக் கப்பலிலிருந்து பல தடவைகள் இராணுவத்தினருடன், பெட்டிகளில் பொருட்களும் வல்வைப் இராணுவ முகாமில் இறக்கப்பட்டன இங்கிருந்த இராணுவத்தினரை மாற்றஞ் செய்வதோடு இராணுவத்தனரும், பல கறுப்புச் சட்டைக்காரர்களும் முகாமுக்குத் தேவையான பொருட்களும் இச்சிறிய படகுகளின் மூலம் இறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வ, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகால நரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R. மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D.A.M., மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

## விற்பனைக்கு

நல்ல இன இரண்டுமாத கடுவன் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு: தொடர்பு நேரில். M. A. கனகரட்ணம், நியூறோட், ஆறுகால்மடம். C-2861

நாரந்தனை மத்தியில் 10பரப்புத் தோட்டக்காணி சிறிய வீட்டுடன் கிணறு, மலசலகூட வசதியுடனும் விற்பனைக்குண்டு நேரில் வரவும். மா. சற்குணன், சங்குவேலி, மானிப்பாய். C-2860

உறுதி எழுத்தாளர்கள் [நொத்தாரிசுமார்] எம்மிடம் அறுதி, நன்கொடை, சீதனம், ஈடு, அற்றோனித்தத்துவம், ஆதிய உறுதிகள் எழுதுவதற்கான படிவங்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். நல்ல தரமான லெஜர் பேப்பரில் அச்சிடப்படுகின்றது. 1 செட்டின் (மூன்று பிரதிகள்) ரூபா 2/50. 100 செட்டின் விலை ரூபா 225/-. ஆங்கிலத்திலும் உண்டு. தொகையாக வாங்குவோர்களுக்கு நேரில் விநியோகிக்கலாம். சிவா பிறிண்டேர்ஸ், 41, மெயின் வீதி, கைதடி. C-2844

½ HP மோட்டர்RPM 1425, Yachika கமரு MG 1, சிறிய சைக்கிள 18'', சிங்கர் தையல் மெசின், Iron Boxes விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், 54/2B, சந்தானமாதா கோவில் முன் வீதி, கொழும்புத்துறை றோட், சுண்டிக்குளி. C-2858

உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் புல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஏற்றது. பேராதனைப்பல்கலைக்கழக அரசறிவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் அம்பலவாணர் சிவராசா அவர்களால் எழுதப்பட்ட இலங்கையின் அரசியல் திட்டங்கள் (கோல்புறூக் முதல் இரண்டாம் குடியரசு வரை) மறுபதிப்பு எம்மிடம் கிடைக்கும். பிரதியின் விலை ரூபா 27/50 சதம். பதிப்பாளர்களும் வெளியீட்டாளர்களும்: சிவா பிறின்டேர்ஸ், 41, மெயின் வீதி, கைதடி. C-2843

மாகியம்பதி கந்தரோடை றோட்டில் நன்னீர்க்கிணற்றுடன் காணியும், வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அப்புத்துரை மாஸ்டர், ''மலர் இல்லம்'', அளவெட்டி தெற்கு. C-2846

Grade Dane இனத்தைச் சேர்ந்த இரண்டுமாத நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: கே. ஆறுமுகராஜா, 16, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். C-2849

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சிற்றிசன் ஆங்கில தட்டச்சு இயந்திரம் (1 10V) மின்சாரத்தில் இயங்குவது விபரங்கட்கு: ஆனந் வீடியோ கோம்(Home), சங்குவேலி தெற்கு, மானிப்பாய். [C-2828]

பிரத்தியேகமாக சேகரிக்கப்பட்ட ஏராளமான ஆங்கில தமிழ் நாவல்களும் உயர் விஞ்ஞான கணித புத்தகங்களும் விற்பனைக்குண்டு. (பல்கலைக் கழகத்திற்குரிய) R. பாலசுப்பிரமணியம், 125, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (C-2799)

லவ் பேட்ஸ் பறவைக்குரிய முக்கிய சாப்பாடு சாமை எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு: கந்தசாமி அன் சன்ஸ், நல்லூர் மார்கட், கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு. C-2866

எம்மிடம் விற்பனையாகின்றன. அஷ்டலக்ஷ்மி ஸ்தோத்திரம், கந்தசஷ்டி கவசம், திருமுருகாற்றுப்படை இவை ஒவ்வொன்றும் ரூபா 2/-. பாராயணத்திரட்டு சகல காரிய சித்திக்கானஸ்தோத்திரங்கள. இவை ஒவ்வொன்றும் ரூபா 4/-. சிவா பிறின்டேர்ஸ் 41, மெயின் வீதி, கைதடி. C-2842

K. K. S Rd, கோபால் ஒழுங்கையில் ஒருபரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 23, கடைச்சாமி றோட், நீராவியடி, யாழ்ப்பாணம். C-2850

## வகுப்புகள்

A/L 88 பௌதீகவியலில், ஒளியியல் (Light) 15 - 6 - 86 காலை 7- 30ஆரம்பம். ஆசிரியர் திரு. பத்மநாதன். A/L 87 இரசாயனவியலில் Organic Chemistry மாத இறுதியில் ஆரம்பம். ஆசிரியர் திரு. மகாதேவா. இடவசதியுண்டு. நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு. (C-2826)

ரேடியோ and ர.வி. (டெக்) வயறிங், வெல்டிங், மோட்டார்மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புதிய பிரிவுகள் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பமாகின்றன, அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C-2786

### வேலணை ப. நோ. கூ. சங்கம் வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சேர்ந்திருக்கும் வெற்றுச் சாக்குகள் 25-06-86ல் கேள்விப் பத்திர மூலம் விற்பனை செய்யப்படும். கேள்விதாரர்கள் ரூபா 250/- வைப்புப்பணம் சங்கத்தில் செலுத்தி, விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இரா. லோகநாதன்,
பதில் பொதுமுகாமையாளர்.
(A 835)

## தேவை

கோழிகள் தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். அண்ணு பாம் இணுவில். (A-831)

## வாடகைக்கு

உரும்பராயில் நவீன வசதிகளுடன் கூடிய டகுதி வீடு மூன்று அறைகளுடன் வாடகைக்குண்டு. சிறியகுடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: சி. மகேஸ்வரா, 'அன்னவிலா' கற்பகப்பிள்ளையார் கோயில் ஒழுங்கை, உரும்பராய். C-2804

கூழாவடி உபதபாற்கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடியவீடு வாடகைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு: ச. ஜெயரட்ணம், கூழாவடி லேன், ஆனைக்கோட்டை என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். C-2848

### நல்லூர் ப. நோ. கூ. சங்கம் வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் வரை விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் காரியாலய நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 25-06-86.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.
(A 833)

### மின் தடை
### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986-6-15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் 33 K. V. மின்பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதனால் காலை 8-00 மணி முதல் மாலை 1-00வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும், கோண்டாவில், கொக்குவில், கோப்பாய் திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத் தடை ஏற்படுமென சகலமின்பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றேன்

இம்மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
[A-834]

விளம்பரம் செய்க

### அரை ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி லீலாவதி சிதம்பரநாதன்**
(சங்கரத்தை)

அன்னை மடியில்: 24-03-1937
அரன் அடியில்: 18-12-1985
6ம் மாசியம்-திதி: 14-06-86

எங்கள் இல்லற ஜோதியாய் அன்பும், பண்பும், பாசமும் ஒருங்கிணைய எம்மை வளர்த்து வாழ வைத்த அன்புத் தெய்வமே உங்கள் நினைவு எங்கள் இதயத்தில் என்றும் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. தங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

தாயார், கணவன், பிள்ளைகள், சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்.
(C 2853)

### யாழ். தொழில் நுட்ப கல்லூரியிலும் படவரைஞர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மே மாதம் 21 திகதி அரசவர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கான பயிற்சி நெறி விண்ணப்பங்களில் தவறுதலாக யாழ். தொழில் நுட்பக் கல்லூரிக்கான படவரைஞர் பயிற்சி நெறிக்குரிய விண்ணப்பம் கோரப்படவில்லை.

எனினும் இப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை ஏற்று இங்கு இப் பயிற்சியை தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். தொழில் நுட்ப கல்லூரி அதிபர் திரு. எஸ். இராஜேந்திரா மேற்கொண்டுள்ளார். (சிவ)

### இன்று பாராட்டு விழா

(புலோலி)

உலக சாதனையாளர் பட்டியலில் இடம்பெற்று லண்டன் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள பட்டயக் கணக்காளர். ஏ. சோமசுந்தரம்பிள்ளையின் அரும் பெரும் சேவைகளைப் பாராட்டி பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலை மன்றம் இன்று 14ம் திகதி மன்ற மண்டபத்தில் பாராட்டு விழா வொன்றை நடாத்துகின்றது.

இப் பாராட்டு விழா மன்றத் தலைவர் திரு. கே. குமாரவேல் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல ஒழுங்குகளையும் மன்றச் செயலாளர். இ. யோகரஞ்சிதம் மேற்கொண்டுள்ளார். (க)

### பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்ல விரும்புபவர்களுக்கும் மத்திய கிழக்கில் சாரதிகளாக, பணிப்பெண்களாக தொழில்புரிய செல்பவர்களுக்கும் விரைவான பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351), மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகில்), யாழ்ப்பாணம். (C2839)

### இலவச கருத்தரங்கும் மாதிரி வினாவிடை வகுப்புகளும்
OPEN SEMINAR and MODEL PAPER CLASSES

A/L Aug. 1986 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்காக கருத்தரங்கும், மாதிரி வினாவிடை வகுப்பும் இலவசமாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

ஆரம்பம்: 18-06-1986.

**Bond Institution,**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(இடநெருக்கடியை தவிர்ப்பதற்காக முன்கூட்டியே பெயர்களை பதிவு செய்க) C-2864

### கனடா—டென்மார்க் பிரயாண ஒழுங்குகள்

கனடா, டென்மார்க் ஆகிய இடங்களுக்கு உடனடிப் பிரயாண ஒழுங்குகள் உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.
அத்துடன் சவூதி அரேபியாவுக்கு தச்சு வேலை தொழிலாளர் பதவிக்கு வெற்றிடங்கள் குறிப்பிட்டளவு கையிருப்பில் உண்டு.
மற்றும் பாஸ்போர்ட், பொன்ட் ஆகியனவும் செய்து தரப்படும்.

தொடர்பு:- **N. பாலா,**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
பிற் குறிப்பு:- (பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை) [C-2812]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பஞ்சாப் — ஹரியாணு பிரச்னே:

# வெங்கட்ராமய்யா கமிஷன் அறிக்கை

# ஏற்றுக்கொள்ளப்பட்டது

[சண்டிகார்]

பஞ்சாப்-ஹரியாணு பிரச்னே தொடர்பாக வெங்கட்ராமய்யா கமிஷனுல் வெளியிடப்பட்ட அறிக்கையை ஹரியாணு ஏற்றுக்கொண்டுள்ளது.

புதுடில்லியில் கூடிய மாநில அமைச்சரவையின் அவசரக் கூட்டமொன்றில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. வெங்கட்ராமய்யா கமிஷன் முடிவு அறிவிக்கப்பட்டதும் முதலமைச்சர் திரு. பன்சிலால் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டினர்.

சண்டிகாருக்குப் பதிலாக ஹரியாணுவிற்கு மாற்றப்படவேண்டிய கிராமங்கள் மற்றும் பகுதிகள் குறித்துப் பஞ்சாப் அரசுடன் பேச்சு நடத்த அமைச்சரவை முதலமைச்சருக்கு அதிகாரம் வழங்கியிருந்தது.

இது இவ்வாறிருக்க, இந்தக் கமிஷனின் அறிக்கை குறித்து விவாதிப்பதற்காகப் பஞ்சாப் அமைச்சரவையின் அவசரக் கூட்டமொன்று நேற்று சண்டிகாரில் கூட்டப்பட்டது.

சண்டிகாருக்குப் பதிலாக ஹரியாணுவிற்குப் பஞ்சாப்பிலிருந்து எழுபதாயிரம் ஏக்கர் நிலப்பரப்பு மாற்றப்படவேண்டும் என்று வெங்கட்ராமய்யா கமிஷன் ஏற்கனவே ஆலோசனே வழங்கியுள்ளது.

ஹரியாணுவிற்கு மாற்றப்படவேண்டிய கிராமங்களைத் தேர்ந்தெடுக்கும் பிரச்னேயைச் சுமுகமாகத் தீர்க்குமாறு கமிஷன் மத்திய அரசையும், பஞ்சாப்-ஹரியாணு மாநிலங்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

ஹரியாணு தனது புதிய தலைநகரை அமைத்துக்கொள்வதில் மத்திய அரசின் உதவி பற்றிக் கமிஷன் குறிப்பிடுகையில்; 'நிலத்தைத் தருவிக்கும் செலவு, அதன் வளர்ச்சி மற்றும் தலைநகருக்குத் தேவையான அரச கட்டிடங்களைக் கட்டுவதற்கு நேரிடும் செலவுகளையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று ஆலோசனே வழங்கியுள்ளது.

பஞ்சாப் பிரதேஷ் இந்திரா காங்கிரஸ் வெங்கட்ராமய்யா கமிஷனின் பரிந்துரைகளே வரவேற்றுள்ளது. குறுகிய பிராந்திய நிலேகளேவிடுத்து எழுமாறு பஞ்சாப், ஹரியாணு முதல்வர்களே அது கேட்டுள்ளது. [து]

---

### எர்ஷாத் நேபாளம் பயணம்

[டாக்கா]

பங்களாதேஷ் அதிபர் லெப்டினன்ட் ஜெனரல் எர்ஷாத் அடுத்தமாதம் முதலாம் திகதி நேபாளத்திற்கு பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

---

### மயிலிட்டியில் கடையடைப்பு

[யாழ்ப்பாணம்]

குருநகர் கடற்றெழிலாளர் கறுப்புச்சட்டைக் காரரினுல் படுகொலே செய்யப்பட்டதற்கு அனுதாபம் தெரிவித்து மயிலிட்டி, வீரமாணிக்க தேவன்துறை, பொய்நாட்டு தேவன் துறை மக்கள் கடைகளே அடைத்து வீதிஎங்கும் கறுப்புக்கொடிகட்டி துக்கம் அனுஷ்டித்தனர்.

---

### "உலகக் கிண்ண" உதைபந்தாட்டம்:

# 2-வது சுற்றுப் போட்டிகள் நாளேமுதல் ஆரம்பம்

## 13-நாடுகள் - 8 போட்டிகள்

[மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோவில் நடைபெறும் 'உலகக்கிண்ண' உதைபந்தாட்டப் போட்டியின் முதலாவது சுற்றுப் போட்டிகள் யாவும் நேற்றுடன் முடிவடைந்துள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இரு போட்டிகளில் பிறேஸிலும், ஸ்பெயினும் வெற்றிபெற்றுள்ளன.

பிறேஸிலுக்கும் - வட அயர்லாந்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், பிறேஸில் 3-1 கோல்களால் வெற்றி பெற்றது. ஸ்பெயினுக்கும் அல்ஜிரியாவுக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில், ஸ்பெயின் 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

**பிரேஸிலுக்கு 6 புள்ளிகள்**

முதலாவது சுற்றுப்போட்டிகளில் மொத்தம் 24 நாடுகளின் கோஷ்டிகள் 36 போட்டிகளில் கலந்துகொண்டன. இக் கோஷ்டிகளில் பிரேஸில் கோஷ்டியே மிகவும் பலம் கொண்ட கோஷ்டியாக தற்போது விளங்குகின்றது. பிறேஸில் இதுவரை கலந்துகொண்ட மூன்று போட்டிகளிலும் சிறப்பாக வெற்றிபெற்று மொத்தம் 6 புள்ளிகளேப்பெற்று முன்னணியில் நிற்கின்றது. மற்றைய கோஷ்டிகள் எதுவுமே ஆறு புள்ளிகளேப் பெறவில்லே என்பது குறிப்பிடத்தக்கது.

**2-வது சுற்றுப் போட்டிகள்**

இரண்டாவது சுற்றுப் போட்டிகள் யாவும் நாளே ஆரம்பமாகின்றது. 2-வது சுற்றில் 13 நாடுகளின் கோஷ்டிகள் மட்டுமே கலந்துகொள்ளத் தகுதிபெற்றுள்ளன. இவற்றுக்கிடையே மொத்தம் எட்டுப போட்டிகள் நடைபெறும். இவையாவும் 'நொக்கவுட்' முறையிலேயே நடைபெறும்.

2-வது சுற்றுப் போட்டிக்கு தகுதிபெற்ற நாடுகளின் பெயர்கள் வருமாறு:

பிரேஸில், ரஷ்யா, ஆர்ஜன்ரீஞ இத்தாலி, மெக்ஸிக்கோ. பெல்ஜியம், பரகுவே. பிரான்ஸ், ஸ்பெயின், டென்மார்க்மே ஜேர்மனி, மொறுக்கோ, இங்கிலாந்து.

நாளே ஆரம்பமாகும் 2-வது சுற்றுப்போட்டிகள் 18ம் திகதி வரை நடைபெறும். அதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் 'கால் இறுதிப்' போட்டிகள் 21-ம், 22-ம் திகதிகளில் நடைபெறும். [வி]

---

### மின் பாவனையாளர் மத்தியில் அதிருப்தி

[சுண்டுக்குளி]

யாழ். அபிவிருத்திச் சபையின் ஆனேக்கோட்டை உப அலுவலகத்திற்குட்பட்ட நவாலிப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் இரவில் தடைப்படுவதனுல் இப்பகுதி தினமும் இருளில் மூழ்குகின்றது.

இதுவிடயம் குறித்து இப்பகுதி மின்பாவனேயாளர்களும் சில பொதுஸ்தாபனங்களும் ஆனேக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அவ்வலுவலக மின் ஊழியர்களும் சில பொதுஸ்தாபனங்களும் இப்பகுதியிலுள்ள சட்ட விரோத மின்வயர்களே அகற்றினர்கள்.

ஆனல் இப்பகுதி மீண்டும் மின் தடையினுல் இருளில் மூழ்குகின்றது. இதனுல் இப்பகுதி நிரந்தர மின் பாவனேயாளர்கள் மத்தியில் பெரும்அதிருப்தி ஏற்பட்டுள்ளது. [க]

---

### ஐரோப்பாவில் படைகுறைப்பு;

# 'நேட்டோ' வரவேற்பு

[பொன்]

ஐரோப்பாவில் நிலேகொண்டுள்ள இராணுவப் படைகளில் குறைப்புகள் செய்யவேண்டும் என்றுகோரியிருக்கும் வார்சோ உடன்படிக்கை நாடுகளின் வேண்டுகோளே நேட்டோ ஸ்தாபனம் வரவேற்றிருக்கின்றது.

ஆயுதக் கட்டுப்பாடு சம்பந்தமான துறையில் ஆக்கபூர்வமான முயற்சி இதுவென்று நேட்டோ ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

அடுத்த பத்தாண்டு காலத்தின் தொடக்கத்திற்குள்ளாக அத்திலாந்திக் பிரதேசத்திலிருந்து படிப்படியாகத் துருப்புக்களே விலக்கிக் கொள்ளலாம் என்று வார்சோஉடன்படிக்கை நாடுகள் நேற்று நேட்டோ ஸ்தாபனத்திடம் ஆலோசனேகளே வழங்கியிருந்தது.

இரண்டு நாள் கூட்டத்தின் இறுதியில் இதனேத் தெரிவித்த இந்தக் கூட்டணியின் பொதுச் செயலாளரான திரு. மிக்கலோ பார்ஷி, துருப்புக்கள் வெளியேற்றத்தின முதலாவது கட்டத்தில் இரு தரப்புகளிலிருந்தும் சுமார் 1 லட்சம் துருப்புக்கள் குறைத்துக்கொள்ளப்படுவார்கள் என்றும், இது அடுத்த ஒரு சில ஆண்டுகளுக்குள் தொடங்கிவிடலாம் என்றும் தெரிவித்தார். [து]

---

### 1985 தேசிய திரைப்பட விருது:

# தேர்ந்தெடுக்கப்பட்டவர்க்கு இந்தியஜனுதிபதி வழங்கினர்

[புதுடில்லி]

புதுடில்லியில் நடைபெற்ற தேசிய திரைப்பட விழாவில் கலந்துகொண்ட இந்திய ஜனுதிபதி ஸியானி ஸெயில்சிங் 1985ம் ஆண்டிற்கான தேசிய திரைப்பட விருதுபெற்றவர்களுக்கான விருதுகளே வழங்கினர்.


'நியூடில்லி ரைம்ஸ்' என்ற ஹிந்தித் திரைப் படத்தில் நடித்த சசிகபூர் சிறந்த நடிகருக்கான விருதை ஜனுதிபதியிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மற்றும் சிறந்தநடிகைக்கான விருதை 'சிந்துபைரவி' படத்தில் நடித்த சுஹாசினி பெற்றுக்கொண்டார்.

சிறந்த இசையமைப்பாளராக 'சிந்துபைரவி' படத்திற்கு இசையமைத்த இளேயராஜாவுக்கும், சிறந்த பாடலாசிரியராக 'முதல் மரியாதை' படத்திற்கான பாடல்களே எழுதிய வைரமுத்துவுக்கும், சிறந்த பின்னணிப்பாடகியாக 'சிந்துபைரவி' படத்திற்காகச் செல்வி சித்திராவுக்கும் ஜனுதிபதி விருதுகளே வழங்கினர். [து]

---

தேசிக்காய் வாசனேயுடன்




எம்டீ நீல சோப்

115 கிறும் ரூபா 2/- மட்டுமே

சிக்கனத்திற்கும், பாதுகாப்பான வெண் சலவைக்கும் நறுமணத்திற்கும்

இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ நீல சோப்

எம்டீ என்ரபிறைஸ்,

அச்சுவேலி.

---

உலகச் செய்திகள்

### போபால் விஷவாயுவழக்கு: வழக்கு இந்தியாவில் நடைபெறும்

[நியூயோர்க்]

போபால் விஷவாயு சம்பவங்கள் பற்றிய வழக்குகள் அமெரிக்காவிலிருந்து பாரத நீதிமன்றங்களில் மாற்றுவது குறித்து பெடரல் நீதிபதி ஒருவர் குறிப்பிட்டிருந்த நிபந்தனேகளே யூனியன் ஹாபைற் நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் அமெரிக்காவிலுள்ள நிறுவனத்தின் தலேமையகத்திலிருந்து இதனேத் தெரிவித்தார். [து]

---

### தென்னுபிரிக்காவில்

# அவசரகாலநிலே

## பிரகடனம் செய்யப்பட்டது

[கேப்டவுன்]

தென்னுபிரிக்க ஜனுதிபதி பி. டபிள்யூ போத்தா நாடு முழுவதும் நேற்று முன்தினம் அவசரகாலநிலமையைப் பிரகடனப்படுத்தினுர்.

இனவாத எதிர்ப்புக்குழுக்கள் அடுத்தவாரம் நாட்டில் பயங்கர மற்றும் நாசவேலேகளில் ஈடுபட திட்டமிட்டிருப்பதாலேயே இந்த அவசரகால நிலமையைப் பிரகடனப்படுத்தியதாக திரு. போத்தா தெரிவித்தார்.

1976-ம் ஆண்டு நடைபெற்ற 'சுவேட்டோ' கிளர்ச்சியின் 10-வது ஆண்டு நினேவை முன்னிட்டு நகர்ப்புறங்களேநோக்கி ஆர்ப்பாட்டங்களேயும். ஊர்வலங்களேயும் நடத்தி அமைதியை குலேப்பதற்கு தடை செய்யப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் திட்டமிட்டிருப்பதாகவும் திரு. போத்தா மேலும் தெரிவித்தார்.

இதேவேளே இன எதிர்ப்பாளர்கள் கோயில் அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கவாதிகளே பொலிசாரும், இராணுவத்தினரும் கைதுசெய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதுவரை 200 பேர்வரை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். [து]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நண்பர்களும் பகைவர்களும் எங்கள் படைப்புக்களே. ஆனல் எங்கள் அயலர் ஆண்டவர் படைப்பென அறிக.

— ஜீ. கே. செஸ்ரேற்றன்

# நமது நோக்கு

## நடுரோட்டும் வங்குரோட்டும்

கலங்கிய நிலையிலிருக்கும் 'இலங்கை வேந்தன்'- ஜனதிபதி ஜெயவர்த்தன ஏற்கனவே திட்டமிட்டபடி மாஸ்கோ விஜயத்தை மேற்கொள்ளுவாரென்ற செய்தி எவ்வகையிலும் வியப்பளிக்காது. கடன்பட்டார் நெஞ்சம்' என்பதை முக்கிய காரணமென விளக்கத் தேவையில்லை.

நாடு இருக்கும் இன்றைய நிலையில் இந்த விஜயம் வெறும் சம்பிரதாயமான விஜயமாக இருக்கமாட்டாது.

தமது சிங்கள மக்களுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடைநடுவில் நின்று தத்தளிக்கும் ஜனதிபதி 1983 கலவரத்தில் சிங்கள மக்களின் விருப்பங்களை உடனடியாக நிறைவேற்ற ஆறும் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது அவருக்கு என்றும் கவலையளிக்கும் செயல். பாராளுமன்றமில்லாத ஆட்சி, சர்வாதிகாரம் படைத்த ஜனதிபதியின் ஆட்சி மூன்று வருடங்களுக்குப் பின் நாட்டை எங்கு கொண்டு சென்றிருக்கிறது.

இன்று இந்த நாட்டில் வாழும் மக்கள் எவ்வித உயிர்ப் பாதுகாப்புமின்றி வாழப் பழக வேண்டியிருக்கும் நிர்ப்பந்தம் நிச்சயம் முதிய அரசியல்வாதி ஜெயவர்த்தனவிற்கு தொடரும் தர்மசங்கடம்.

1983ல் எடுத்த பிரயத்தனம் - தென்கொரியா தொடக்கம் செஞ்சீன, ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன் வரைக்கும் எடுத்த அரசியல் யாத்திரை நிலைமைக்கு நிவாரணம் அளிக்கவில்லை. வெளிநாட்டுப் படைகள், ஆயுத உதவி, நிதிஉதவி நிலைமையில் எள்ளளவும் திருத்தம் அளிக்கவில்லை. தமிழ் அப்பாவிமக்கள் பல்லாயிரக்கணக்கில் அழிந்தபோதும் தமிழ்த் தீவிரவாதப் போர் ஒய்ந்தபாடில்லை.

பத்திரிகைகளுக்கும் பயங்கரப் பேட்டிகள் மக்கள் தொகையைக் குறைத்தபோதும் நாட்டின் பயங்கர நிலை மிக மோசமாய்விட்டது.

எனவே, பசுக்களில் மிகப் பயங்கரமான பசுவாயிருந்தபோதும், அதன் நிலைப்பாடு என்ன? இன்றைய கட்டத்தில் இலங்கையின் தமிழர் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையாக இருந்தபோதும் இன்று உலகப் பிரச்னையாகி விட்டது. அதனை அண்டைநாடாகிய இந்தியா—ரஷ்யாவின் ஆப்த நண்பன்—தீர்த்துவைக்க எடுக்கும் முயற்சி இலங்கைக்கோ, தமிழர் பிரச்னைக்கோ உதவுவதாயில்லை. இதனை யாருக்கு இனி முறைப்படலாம்? மாஸ்கோ செல்லும் ஜனதிபதி, தக்கமுறையில் அங்கு கொலுவிருக்கும் கிரம்லின் தெய்வங்களுக்கு ஆசியாவின் முதுபெரும் 'அரசியல் சாணக்கியர்' என்ற பெருமைக்குப் பங்கம் விளைக்காது விசயத்தை எடுத்துரைப்பாரென்பதில் ஐயமில்லை.

இலங்கை அணிசேரா நாடுகளில் ஒரு பிரபல இடம்வகிக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. இந்த அணிசேராக் கொள்கைக்கு புத்தபெருமான் போதித்த 'நடுப்பாதை' (Middle Path)- என்ற ஆன்மிகக் கருத்தை ஊட்டியிருந்தார். பாராளுமன்றத்தில் அவர் நடத்திய விளக்கத்தில் இதனை ஒரு நடனத்துக்கு ஒப்பிட்டு, 'சீலைக்காலை முன்னே வை, ஓலைக்காலை பின்னே வை' என்ற அநாகரிக நாட்டியப் பயிற்சிக்குப் பதிலாக, வலதுகால் வலதுபக்கம் சென்றல் இடதுகால் அவ்வாறே இடது சென்ற வகையில் ஆடும் நாட்டியம் இரண்டு கால்களும் 'நடுரோட்டில்' உறுதியாகும் என்றார்.

இவ்வித ஆட்டத்தில் தொடர்ந்துவரும் ஐ. தே. ஆட்சியும், சிறிலங்கா சீன பக்கம் அதிகதூரம் சென்றல், ஐ. தே. ஆட்சி அமெரிக்காவிடம் தஞ்சம் புகுவது இயற்கை. ஆனல் அணிசேராக் கொள்கையில் அதிகம் பிசகாது நிற்கும் இச்சிறு நாட்டுக்கு மூன்றும் உலகை ஆதரிக்கும் வல்லரசுகள், குறிப்பாக ரஷ்யா, சிக்கல் நிறைந்த பிரச்னைக்குத் தீர்வுகாண வழிகாட்ட வேண்டும். இன்று வங்குரோட்டில் தொடரும் பயணம் நிறுத்தப்படவே Moscow மாஸ்கோ என்ற பசுவை நெப்போலியன் தொடக்கம், பின்பு ஹிட்லர், இன்று பலர் கறக்கப்பட்ட, படும்பாடு உலகறியும்; இருப்பினும் சாவதானமாக ஜனதிபதி ஜெயவர்த்தன உங்கள் நண்பனுக்கு ஒரு சொல்லுச் சொல்லுங்கள் என்று கேட்கலாமா? இவ்வித உதவியே நாட்டுச்கும் நமக்கும் மறுபிறப்பளிக்கும்.

## தீவுப்பகுதியில் உணவுப்பொருள் விலைகள் அதிகரிப்பு

[வேலணை]

தீவுப்பகுதியில் உணவுப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தனியார்வர்த்தகநிலையங்களில் அரிசியின் விலை பன்னிரண்டு ரூபாவரை விற்பனைசெய்யப் பட்டுவருகின்றது. இதே போன்று தேங்காய், மற்றும் உணவுப்பொருட்களும், மரக்கறி வகைகளின் விலைகளும்அதிகரித்துள்ளது

இந்த நேரத்தில் சிறுவர்கள், விரும்பும் பிஸ்கட், இனிப்பு வகைகளும்கூட அதிகவிலைக்கு விற்கப்பட்டு வருகின்றது.

யாழ் நகரில் இருந்து தீவுப் பகுதிக்கு கொண்டுவரப்படும் பொருட்களை நான்கு, ஐந்து முறைஇறக்கப்பட்டு பல வாகனங்களில் ஏற்றி இறக்கப்பட்டு ஒவ்வொரு வாகனங்களுக்கும் பெருந்தொகையான [illegible] கொடுத்து ஏற்றிவரப்படுவதி ஞலேயே இவ்விதமான விலை அதிகரிப்பை செய்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றர்கள்.

இது இவ்விதம் இருக்க, தீவுப் பகுதியில் எரிபொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு இருப்பதினல் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பெருந்தொகையான உப உணவுப் பயிர் வகைகளுக்கு தண்ணீர் இறைக்க முடியாது அந்தப்பயிர் வகைகள் யாவும் வாடி கைவிடப்பட்டு விட்டன. இதனல் இப்பயிர் வகைகளை மேற்கொண்ட விவசாயிகள் பெருத்த நஷ்டமடைந்துள்ளனர்

இந்தநிலை மேலும் தொடர்ந்து நீடித்துக்கொண்டு [illegible] பெரும் உணவுப்பஞ்சம் ஏற்படுமென அஞ்சப்படுகிறது. [ ]

# "குடாநாட்டைக் கட்டுப்படுத்தும் இலங்கை அரசின் திட்டத்தை தமிழ்ப் போராளிகள் திறமையாக முறியடித்தனர்"

## 'புரொன்ட்லைன்' சஞ்சிகை விமர்சனம்

**"கடந்தமாத நடுப்பகுதியளவில், யாழ்.குடாநாட்டினை 'இடுக்கிமுறைத் தாக்குதல்' மூலம் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவர இலங்கை அரசு தனது ராணுவத்தைப் பயன்படுத்தியது. ஆயினும் இந்தத் திட்டம் உயர் கொள்கை கொண்ட கெரில்லாத் தாக்குதலினல், குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் கடுமையான எதிர்த் தாக்குதலினல் முறியடிக்கப்பட்டது.**


**இவ்வாறு இலங்கை அரசினல் கடந்தமாத நடுப்பகுதியில் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ராணுவத் தாக்குதல் பற்றி விமர்சித்துள்ள சென்னை 'புரொன்ட்லைன்' சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**இவ்விமர்சனத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:**

### நோக்கம் வேறு

யாழ்.குடாநாட்டின்மீதான தனது ராணுவத் தாக்குதலைத் திட்டமிடுகையில் அது ஒரு 'துருப்புகளின் பரிமாற்ற நடவடிக்கை'யே என இலங்கை அரசு விளக்கமளிக்க முயன்றது. ஆயினும் சகலபகுதிகளிலிருந்தும் குடாநாட்டினுள் படைகள் குவிக்கப்பட்டதும், திருமலையிலிருந்து கடற்படை பீரங்கிப்படகுகள்வடகரைக்கு அனுப்பப்பட்டதும், இலங்கை அரசு வேறு ஏதோ யோசித்துள்ளது என்பதை தெளிவாக்கியது.

யாழ்ப்பாணத்தைக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரஎடுக்கப்பட்ட முயற்சியானது, அரசு விவேகமற்ற விதத்தில் ராணுவத்தைப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டமையைக்காட்டியது. அத்துடன் தமிழ்க்குழுக்கள் பேச்சுவார்த்தைக்கு இணங்காவிடின், தன்னல் கடைசியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு மேலதிக விளக்கங்கள் அளிக்கமுடியாது என இந்திய அரசிடம் திட்டமாகக்கூறியது, இலங்கை அரசாங்கம் அரசியல் தீர்வொன்று காணும் ஆர்வத்தில் இருந்து விலகிப் போகிறது என்பதையே காட்டியது.



தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளால் தகர்க்கப்பட்ட தொண்டமானறு பாலம். பல ராணுவ முகாம்களை இணைத்தது இந்த பாலமே!

### தந்திரத்தை முறியடித்த தந்திரம்

யாழ். குடாநாட்டை, ஒரு இடுக்கியைக்கொண்டு சுற்றிவளைக்குமாப்போல் சுற்றிவளைத்துத்தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே ராணுவத்தின் திட்டம்.

இதன்படியே மே மாதம் 14 ம் திகதியளவில் நன்ருக ஆயுதபாணிகளாக்கபட்ட 2 000 படையினர் கவச வாகனங்களுடன் அநுராதபுரத்தில் இருந்து ஆனையிறவூடாக குடாநாட்டினுள் பிரவேசிக்கும் நோக்குடன் புறப்பட்டனர்.

இதேவேளை, கடற்படைப் படகுகளும் பீரங்கிப் படகுகளும் திருமலைத்துறைமுகத்திலிருந்து வடகரை நோக்கிச் சென்றன. சுமார் 500 துருப்பினர் ஊர்காவற்றுறையில் தரையிறக்கப்பட்டு காரைநகருக்கு கடல் வழிமூலம் கொண்டு செல்லப்பட்டனர். ஆனையிறவினூடான துருப்பு நகர்வை, குடாநாட்டில் முகாம்களில் நிலைகொண்டுள்ள துருப்புக்களின் வெளிநகர்வு மூலம் இணைப்பதே ராணுவத்தின் திட்டம். இவ்வகையில் இணைக்கப்பட்ட துருப்புக்கள் பின்னர் குடாநாடெங்கும் இணைந்துசெல்லும்.

இந்த ராணுவத்தாக்குதல் மே மாதம் 17-ம் திகதி ஆரம்பமாகியது ஊர்காவற்றுறை, பலாலி ஆனையிறவு, கோட்டை, கிளிநொச்சி ஆகிய முகாம்களிலிருந்து துருப்பினர் 'தேடுதல் - அழித்தல்' நடவடிக்கைக்காக பெருவளவில் வெளிவந்தனர். தரைப்படையினருக்கு 3 பொம்பர் விமானங்களும், பல ஹெலிகொப்டர்களும் பாதுகாப்பு வழங்கிய வேளையில் ஊர்காவற்றுறையருகேயுள்ள கரையோரக் கிராமங்களை கடற்படைப் படகுகள் தாக்கின.

ஆயினும் துருப்பினர் தங்கள் திட்டம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் முன்னணிப்படுத்தப்பட்டு "தமிழீழ இராணுவத்தினர்" மற்றும் "ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர்" ஆகியோரின் பங்குபற்றலுடன் கூடியசக்திமிகு எதிர்தாக்குதலினல்தடைபட்டதையே கண்டனர்.

ஹெலிகொப்டர்கள் இயந்திர துப்பாக்கிகள், மோட்டர்கள், றொக்கெட்டுகள். கவச வாகனங்கள் ஆகியவை உள்ளடக்கிய மோதல்கள் ராணுவத்துக்கும், போராளிகளுக்குமிடையே பல இடங்களில் மூண்டன.

முகாம்களிலிருந் வெளியேற முயலும் ராணுவத்தினரை நோக்கி விரைவாகச் சென்று கடுமையாகத் தாக்குவதே போராளிகளின் பிரதான தந்திரம். அத்துடன் முகாம்களினுள்ளேயே ராணுவத்தினரை தடுத்துவைக்கும் நோக்கும் எல் ரி. ரி ஈ யினர் முகாம்களருகில் "சென்றி" களை வைத்துள்ளனர். இந்த "சென்றி"கள் முகாம்களைத் தொடர்ச்சியாக அவதானித்தவண்ணம் இருப்பதுடன் முகாம்களிலிருந்து படையினர் வெளியேறின் வேறெங்கோ தயாராயுள்ள தமது தலைமை பிரிவுக்கு அறிவிப்பர். பின்னர் எல். ரி ரி ஈ.யினர் அவ்விடத்துக்குச் சென்று வெளியேறிய படையினரை கடுமையாகத் தாக்கி பின்வாங்கச்செய்வர்.

வல்வையிலும் பருத்தித்துறையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ராணுவ முகாம்களைச் சுற்றிவளைத்துள்ளனர்.

போராளிகளின் மற்றொரு யுத்தத்திட்டமாவது யாதெனில் உள்ளூர் கிராம வாசிகளின் உதவியுடன் கவச வண்டிகளை மண்மூடைகளைக்கொண்டு தடுத்தல். இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்ட கவசவண்டிகள் மீது தாக்குதல் நடத்தப்படும்,

ஆனையிறவிலிருந்து 28 கவச வண்டி சகிதம் புறப்பட்ட ராணுவப்பிரிவொன்று கொடிகாமத்தடியில் எல். ரி ரி. ஈ. கெரிலாக்களினல் நிறுத்தப்பட்டது கடுமையான இழப்புகளின் பின்னர் ராணுவத்தினர் எல். ரி. ரி. ஈ.யின் கூற்றுப்படி மீண்டும் ஆனையிறவுக்கு ப்பின்வாங்க வேண்டி ஏற்பட்டது கிளிநொச்சியிலிருந்து வந்த இன்னெரு பிரிவும் இவ்வாறு கண்ணிவெடித்தாக்குதலுக்குள்ளாகி பலர் கொல்லப்பட்டனர். இவ்வாறு பலாலி கோட்டை ராணுவ முகாம்களின்றும் வெளியேறிய ராணுவத்தினர் எல். ரி. ரி. ஈ. படைகளின் சக்திமிகு தாக்குதலுக்குள்ளாகி பின்வாங்க வேண் ஏற்பட்டது என எல். ரி. ரி. ஈ. கூறியுள்ளது.

### அரசின் தந்திர மாற்றம்

இவ்வாறு இந்த 3 நாள் கடும் சண்டை ராணுவத்தினரை முகாம்களுக்கு பின் வாங்கவைத்ததுடன் அரசின் யுத்த தந்திரத்தையும் மாற்ற வைத்தது. அது தரைத்தாக்குதலிருந்து கடல்வழிமோட்டார் மற்றும் முகாமிலிருந்து

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன, 8 வாரம் சென்ற பூச்சி அகற்றிய அழகான அல்சேஷன் (Alsation) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு அரியரெத்தினம், மாக்கற் றோட் (பேக்கரி முன்பாக) கொக்குவில் மேற்கு. (C-2880)

புதியசோனி 27 ''(2760' Colour T,V Remote Control உடன் விற்பனைக்குண்டு. 14'' 17'' 20'' நல்ல T V யுடன் மாற்றம் செய்வதற்கு பரிசீலிக்கப்படும். விபரங்கட்கு சமுத்திரா மல்ரி சேவிஸ், 303, பலாலிவீதி, கோண்டாவில் சந்தி. (C-2872)

சிங்கர் தையல் மெஷின், றேடியோக்,கசற், குளிர்சாதனப் பெட்டி, தேக்கு அலுமாரி. அயன்சேவ், போமிக்கா மேசை, (8 கதிரை உட்பட பெரியமேசை) 20'' கலர்T.V T V. ஸ்ராண்ட், சிற்றிசென், சுவர்மணிக்கூடு பேபிகொற் 4' உயரமுள்ள வெண்கல வாஸ், Ken Wood Chef ரீ ரொலி இன்னும் பல விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன், பிறீ மல்ரி சேவிஸ் ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி சந்திக்கும் யாழ் வளாக மருத்துவக் கல்லூரிக்குமிடையில். (C- 2873)

### காணவில்லை

ஞானப்பிரகாசம் றோசமேறி பத்திமா வீதி, பண்டத்தரிப்பு என்பவருடைய அடையாள அட்டை டயறியுடன், மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். (C-2881)

**லிடோ**
காலை 10-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(கலர்)

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

**லிபேட்டி சினிமாவில்**
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
Bygerald seymour நடித்த
**Harrys Game**
அதி நவீன ஆயுதங்களைக் கொண்டு பயங்கரவாதிகளை அழிக்க முயற்சிக்கும் பயங்கரபோர் நுட்பங்களை கண்டு களியுங்கள்.
(கண்டிப்பாக வயது வந்தோர்க்கு மட்டும்)
10-30, 2-30, 4-30, 6-45
[ஒறிஜினல் பிரதி]
1986ம் ஆண்டு வெளியீடு

## 45-வது நாள் நினைவஞ்சலி



மகாஜனக் கல்லூரி 9-ம் வருட மாணவன், ஒன்றுமறியாப் பாலகன்

**செல்வன் நடராஜா குணவதன்**
(சண்டிலிப்பாய் வடக்கு)

ஆண்டவன் படைப்பில்:
20-06-1973

ஆண்டவன் பறிப்பு:
01-05-1986
(அகால மரணம்)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய், ஏக புத்திரனாய்! வந்துதித்தவனே! அன்புடனும் பண்புடனும் பாசத்துடனும் வீரத்துடனும் மதிப்புடனும் வாழ்ந்தவனே! உன் வளர்ச்சி கண்டு மனம் மகிழ்ந்த வேளையில் ஒன்றுமறியாப் பாலகனாகிய - நீ அகால மரணமானாயோ! 'உனது வயதொத்தவரைக்' காணும் போது எமதுள்ளம் படும் பாட்டை யார் அறிவார்? உனது உருவமும், உனது செய்கைகளும் எம்மனதை விட்டகலுவதில்லையே! உன் ஆத்மா சாந்தியடைந்து மீண்டும் எம் குடியில்... வந்துதிக்க வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா,
அக்காமார்,
அண்ணன்மார், மாமி,
பெரியம்மா,
உறவினர்கள்.

குறிப்பு: 02-05-86 இராஜஸ்தான் இல்லத்தில் நடைபெற்ற அன்னாரின் ஈமச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும், குறிப்பாக 01-05-86 இரவு வேளையில் எமக்கு உதவி புரிந்த மானிப்பாய் தனியார் மருத்துவமனை டாக்டருக்கும், தாதிமாருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

த. சிவானந்தன்,
மாவடி,
வட்டுக்கோட்டை.
(C 2877)

## இரு முஸ்லிம்கள்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அதிபர் அலுவலகத்துக்கு சென்றிருந்தனர். அங்கு உணவு முத்திரை மற்றும் உணவுப் பொருள்களையும் எடுத்துக்கொண்டு, அகதிகள் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்த பொழுது 'அலிஒழுவ' என்னுமிடத்தில் வாள், துப்பாகி சகிதம் கட்டைக் காற்சட்டை அணிந்த 12 பேர் அவ்வண்டிகளை மறித்தனர். வண்டிகளில் இருந்த ஆண்களையும் பெண்களையும் அவ்விடத்தில் வைத்து வண்டிகளிலிருந்து இறக்கிவிட்டு நிலத்தில் குந்திஇருக்குமாறு உத்தரவிட்டனர். பின்னர் அவர்களை வளால் வெட்டியும். துப்பாக்கி

## பகல் பாதுகாப்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸ ஊழியர்களாக இச்சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் நகரில் 10 யாருக்கொருவராக நேற்று நிற்கக்காணப்பட்டனர்.

கடுமையான வெய்யிலில் சேவையிலீடுபட்டிருந்த இப்பொலிஸ்ஊழியர்களுள்ஒருவா நேற்று மயங்கி விழுந்ததைத் தொடர்ந்து இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

சிங்கள இளைஞர் இப்பொலிஸ் பிரிவில் புதிதாக அமர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [மா]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

அச்சுவேலி நமசிவாயம் இளையதம்பி என்பவரின் மரண சாதனமற்ற மரணச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணச்சொத்து நியாயாதிக்கம் } இல.ரி/183

இளையதம்பி நந்தகுமார்-அச்சுவேலி.

மனுதார்

1. இளையதம்பி கைம்பெண் மிதினேஸ்வரி
2. இளையதம்பி தியாகராசா
3. இளையதம்பி ஞானபாலன்

எல்லோரும் அச்சுவேலி வடக்கு.

எதிர் மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரண ாதனமற்ற மரணச் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986-ம் ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாது என்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
**ஆழ்வார் சிவபாதசுந்தரம்.**
பதிவாளர்.

வரைவு
க. வ. பாலசிங்கம்
மனுதாரின்
சட்டத்தரணி,
அச்சுவேலி. C 2870

## கப்பல்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு கப்பல் ஒன்று காங்கேசன் துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தது.

இதனைத் தொடர்ந்து சீனிக் கப்பலொன்றும் வரவிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

யால்சுட்டும்கொலைசெய்கனர்.

இச் சம்பவத்தில் கொலை செய்யப்பட்டவர்களில் 23பேர் தமிழர்களாவர். இருவர் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது ]மா]

## திருமணசேவை

**பிறீ மல்ரி சேவிஸ்,**
ஆடியபாதம் வீதி, யா/ திருநெல்வேலி வடக்கு.
(யாழ், வளாக மருத்துவபீடத்திற்கும், திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில்)

சீர்வரிசை, உயர்படிப்பு, அழகு, நற்பண்பு, நயந்தளி சீதனம் இவைபலவும் கொண்ட நம் யுவதிகளுக்கு என்ஜினியர், டாக்டர், கணக்காளர் தேவை. மற்றும் பலதரப்பட்ட தொழில்வளம் சான்ற மணமக்களின் குறிப்புகள் எம்மிடம் உண்டு. விபரங்களுக்குத் தொடர்பு கொள்க.

(C 2874) பொது முகாமையாளர்.

## பிரயாண ஒழுங்குகள்

**American Travels**
அழைக்கிறது.

★ அமெரிக்கா ★ கனடா ஆகிய நாடுகளுக்கு உடன் VISA ரிக்கற் எடுத்துக் கொடுக்கப்படும்.
★ டென்மார்க் செல்ல விரும்புவோர் உடன் பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்
★ இத்தாலி ★ பிரான்ஸ் ★ ஜெர்மனி
★ கோலன்ட் ஆகிய நாடுகளுக்கு ஜூன் மாதம் 30-ம் திகதி எமது பிரதிநிதி உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார். 23-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். மற்றும் இந்தியாவுக்கான ரிக்கற் VISAவும் செய்து கொடுக்கப்படும். உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**திரு றேட் சென்ரர்,**
பலாலி றோட், கோண்டாவில்சந்தி,
கோண்டாவில்.

(C 2876]

## நன்றி நவிலல்

மண்டைதீவில் ஆயுதப்படையினரால் கொடூரக் கொலை செய்யப்பட்ட 31 குருநகர் கடற்றொழிலளர்களின் சடலங்களைப் பார்வையிட்டு ஆறுதல கூறிய யாழ் ஆயர், அரசாங்க அதிபர். உதவி அரசாங்க அதிபர்கள், யாழ் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுஸ்தாபங்களின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் இறந்தவர்களின் பிரேத பரிசோதனையை சிரமங்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாக நடாத்திமுடிக்க பெரும்பங்காற்றிய பேராசிரியர் சரவணபவானந்தன் அவர்களுக்கும்உதவியாகஇருந்துதொண்டாற்றிய வைத்தியர்கள் பல்கலைக்கழக வைத்திய மாணவர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம். மேலும் மரணவிசாரணையைத் துரித கதியில் நடத்திமுடித்த மாவட்ட நீதிபதி, மரணவிசாரணை அதிகாரி, சட்டஆலோசகர்கள், கிராமசேவையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறந்தவர்களின் ஆத்ம இளைப்பாற்றிற்காக திருப்பலி ஒப்புக்கொடுத்து ஈமக்கிரியை நடாத்திய அதி. வண யாழ் ஆயர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அனைவர்க்கும் எமது மனம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அகால மரணமடைந்த கடற்றொழிலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி பிரசுரங்கள் வெளியிட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், திணைக்கள அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், ஊழியர்கள், பொதுஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள். மாணவ மாணவிகள், விடுதலை அமைப்புக்கள், யாழ். மாநகரசபை ஊழியர்கள், மற்றும் நேரடியாக அஞ்சலி செலுத்தி இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றிய தமிழ்ப்பேசும் பொதுமக்கள் அனைவருக்கும் நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்னும் எமக்கு உதவியாகவிருந்த புகைப் படப்பிடிப்பாளர்கள், வீடியோ படப்பிடிப்பாளர்கள், 'ஈ' சன்ஸ் ஸ்தாபனத்தார் ஒலி, ஒளி அமைப்பாளர்கள்,வாகனங்கள் தந்துதவியவாகன உரிமையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குருநகர்**
**கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம்**
**வெ. செபஸ்ரியாம்பிள்ளை**
தலைவர்.

## நன்றி நவிலல்

கோண்டாவில் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் பூசகராக பல வருடங்கள் தொண்டாற்றிக் கொண்டிருந்த அமிர்தலிங்கம் சிவராஜாஐயர் அவர்கள் எதிர்பாராத விதத்தில் 27-02-1986 இல் அரச படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி அகால மரணமடைந்த போது,மரணச் சடங்கிற்கு நிதி சேகரித்து தந்துதவிய நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் பரிபாலன சபையினருக்கும், கோண்டாவில் வாழ் பொது மக்களுக்கும், வெளிநாட்டு நண்பர்களுக்கும், உற்றார் உறவினருக்கும் என்குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பூரணவதி சிவராஜஐயர்**
நாகபூசணி அம்பாள் கோவில் வீதி,
கோண்டாவில்.
(C2879)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரு. பிரஜைகள் குழுவின்

# கட்டுப்பாட்டுக்குள் இணக்கசபைகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறைப் பகுதியிலுள்ள இணக்க சபைகள் யாவும் பிரஜைகள் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு அவை புனரமைக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்திவேலைகளையும் பிரஜைகள் குழு மேற்பார்வையிட முடிவுசெய்துள்ளது.

பரு த்தித்துறை பிரஜைகள் குழு துணைச்செயலாளர் திரு. ஆ. தேவராசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

பருத்தித்துறை பிரஜைகள் குழு புதிய அலுவலர் தெரிவுடன் பருத்தித்துறை தொகுதிக்கான மத்திய பிரஜைகள் குழுவாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது கிராமசேவகர் பிரிவு, கிராமசபை வட்டாரப் பிரிவு, நகரசபை வட்டாரப் பிரிவு என்று இடத்துக்கேற்ப பிரஜைகள் குழுவின் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 27 கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர நான்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், அகதிகள் புனர்வாழ்வுச்சபை, ஆரம்ப சுகாதார நிலைய ஒன்றியம், போக்குவரத்துச் சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், மருத்துவமனை அபிவிருத்திச்சபை முதலான சேவை நிறுவனங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 10 மணிக்கு பணிமனையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பருத்தித்துறைத் தொகுதி முழுவதும் அடங்கியதாக இது அமைந்து, செயற்பட்டு வருகிறது அத்துடன் இதன் அதிகாரவரம்பு மக்கள் தொடர்பான அனைத்து துறை சார்ந்த பரிமாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. [க]

# "முற்போக்கு ஜனநாயக சக்திகளின் சின்னமாகத் திகழ்ந்தார்"

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைச் சம்பவங்கள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இன்றைய சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக சளைக்காது போராடிவந்த சரத் முத்தெட்டுவேகமவின் இழப்பு உண்மையிலேயே பேரிழப்பாகும்'' இந்நாட்டின் ஜனநாயக மனித உரிமைகளை வலியுறுத்தும் தமிழ் மக்களின் நியாயமான அடிப்படை உரிமைகளை அங்கீகரிக்கும் நாட்டையும் - மக்களையும் நேசிக்கும் முற்போக்கு ஜனநாயகச் சக்திகளின் சின்னமாகவே அவர் திகழ்ந்தார்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் நல்லூர் இந்துவ்டுதியில் மறைந்த சரத முத்தெட்டுவேகமவுக்கு நடத்திய அஞ்சலிக் கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் [இடது] சார்பில் கலந்துகொண்டு உரையாற்றிய திரு கே. செந்திவேல் குறிப்பிட்டார்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கத்தின் உபதலைவர் சட்டத்தரணி திரு. இ. சீவரட்ணம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அஞ்சலிக் கூட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் பொன். குமாரசுவாமி பேசுகையில்: அமரர் சரத் ஓர் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்த போதிலும் தான் ஏற்றுக்கொண்ட பொதுவுடமைக் கொள்கைக்கு ஏற்ப சாதாரண மக்களின் துன்ப துயரங்களில் பங்குகொண்டு அவற்றில் இருந்து அம்மக்களை மீட்டெடுக்கும் அரசியல் பணியில் தொடர்ந்து செயல்பட்டு வந்தார் என்றார் அவர். சிங்கள மக்களின் ஒரு பகுதியொன்றின் பிரதிநிதியாக இருந்தும் தமிழ் மக்களுக்காகவும் தோட்டத் தொழிலாளர்களுக்காகவும் வாதாடி வந்தார் என்றும் இது அவரது நேர்மையையும் கொள்கைப்பற்றையும் வெளிப்படுத்துகின்றது என்றும் கூறினர்.

இவ் அஞ்சலிக் கூட்டத்தில் திருவாளர் என். சோமகாந்தன், க. தணிகாசலம், பே. அன்பழகன். எஸ். விஜயானந்தன், சோ. தேவராஜா ஆகியோரும் உரையாற்றினர்.

## கிளிநொச்சிக்கு மருந்துகள்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சியில் பொம்பர், ஷெல் தாக்குதலில் காயமடைந்த பொதுமக்களுக்கு உயர்நிலை மாணவர் ஒன்றியம் சுமார் மூவாயிரம் பெறுமதியான மருந்துவகைகளை அனுப்பிவைத்துள்ளது. [க


பிரயாண ஒழுங்குகள்

✯ கனடா ✯ ஜேர்மனி

✯ பிரான்ஸ் ✯ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜேர்மனி, கனடா செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,

(மகளிர் கல்லூரி அருகாமை),

மானிப்பாய்.

[A-729]


கிளிநொச்சியில்

# உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சிப் பகுதிகளில் அகதிகளாக்கப்பட்டுள்ள மக்கள் கிளி-உருத்திரபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம், காந்தி நிலையம், நவஜீவனம் ஆகிய இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களின் அத்தியாவசிய நலன்களைத் தொண்டர் ஸ்தாபனங்கள் கவனித்துவருகின்றன.

கிளிநொச்சிப்பகுதியில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு மேலதிக அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம் பூநகரி ப. நோ. கூ. சங்கமூலம் 10 ஆயிரம் பெறுமதியான உணவுவகைகளை உருத்திரபுரத்திலுள்ள தனியார் கடைகள்மூலம் உடனடி விநியோகத்துக்காக அனுப்பிவைத்துள்ளார்.

''சிறுவர் நலன்பேணும் ஒன்றிய''த்தின் இயக்குனர் திரு. எஸ் சோதிராசாவுடனும் மேலதிக அரசாங்க அதிபர் உணவுத் தட்டுப்பாட்டைநீக்க உதவிகோரித் தொடர்புகொண்டுள்ளார்.

இத்துடன் காயங்களுடனும் நோயாளர்களாகவுமுள்ள மக்களுக்கான மருந்துவகைகளையும் உடனடியாகக் கிளிநொச்சிக்கு அனுப்பிவைக்க அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அகதிகளாக்கப்பட்ட மக்களின் உடனடித் தேவைகளை ஆராயும்பொருட்டும், தற்போது அங்கு நிலவும் சூழ்நிலையை ஆராயும்பொருட்டும் பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மேலதிக அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வமான கூட்டமொன்றினை நடாத்தியுள்ளார். இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள் உட்பட இப்பகுதிகளைச் சேர்ந்த கிராமசேவையாளர்களும் கலந்துகொண்டனர்.

இத்துடன் கொழும்பிலுள்ள புனர்வாழ்வு அமைச்சுடனும் மேலதிக அரசாங்க அதிபர் தொடர்புகொண்டு உணவுத் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்க நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்திக்கேட்டுள்ளார். [ஐ-க]


# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ். அபி. சபையால் 1986ம் ஆண்டு ஜுலை மாதம் ஏழாம் திகதி (07-07-1986) முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடியதொகைக்கு கட்டிடவேலைகள் செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிட திணைக்களம், உள்ளூராட்சி திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1986ம் ஆண்டு ஜுலை மாதம் மூன்றும் திகதி பி. ப. 2-00 மணிவரை (03-07-86) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணமாக ரூபா ஐம்பதும் (ரூ. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா இருநூற்றி ஐம்பதும் (250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் (கச்சேரி) வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம், கேள்விவைப்புப் பணம் ஆகியன காசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக்கட்டளையாகவோ செலுத்தப்படவேண்டும்.

கேள்விகள் 1986ம் ஆண்டு ஜுலை மாதம் ஏழாம் திகதி காலை 10-30மணிக்கு யாழ். அபி சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விகாரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். அபி. சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ. கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ். மாவட்டம்.

யாழ். அபி. சபை அலுவலம்,
யாழ்ப்பாணம்,
1986-06-12.

| | பாடசாலையின் பெயர் | விபரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | யா/யாழ். தமிழ் கொன்வென்ற் ம. வி. | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 175,000.00 |
| 02. | யா/ வேலாயுதம் ம. வி. | மேல்மாடி-படி-1 60' 0'' x 25' 0'' | 250,000.00 |
| 03. | யா/வீமன்காமம் ம. வி. | மேல்மாடி-படி-1 28' 9'' x 25' 0'' | 125,000.00 |
| 04. | யா/கோப்பாய் நாவலர் ம. வி. | மேல்மாடி-படி-1 48' 9'' x 25' 0'' | 200,000 00 |
| 05. | யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி | மேல்மாடி-படி-2 48' 9'' x 25 0'' | 150,000.00 |
| 06. | யா/அத்தியார் இந்துக் கல்லூரி | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 175,000.00 |
| 07. | யா/சாவகச்சேரி மகளிர் ம. வி. | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 175,000.00 |
| 08. | யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் | பாடசாலை கட்டிடம் மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 150,000.00 |
| 09. | யா/மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 150,000 00 |
| 10. | யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 150,000.00 |
| 11. | யா/நீர்வேலி அ. க. த. க. பாடசாலை | பாடசாலை கட்டிடம் 60' 0'' x 20' 0'' | 125,000.00 |
| 12. | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 150,000.00 |
| 13. | யா/தொண்டமானாறு ம. வி. | பாடசாலை கட்டிடம் 60' 0'' x 20' 0'' | 150 000 00 |
| 14. | யா/கட்டைவேலி யாக்கரு வித்தியாலயம் | பாடசாலை கட்டிடம் 60' 0'' x 20' 0'' | 150,000,00 |
| 15. | யா/சென். அந்தனீஸ் ஆண்கள் பாடசாலை-ஊர்காவற்றுறை | பாடசாலை கட்டிடம் 30' 0'' x 20' 0'' | 100,000 00 |
| 16. | யா/துரையப்பா ம. வி. கொழும்புத்துறை | பாடசாலை கட்டிடம் 60' 0'' x 20' 0'' | 125,000 00 |
| 17. | யா/அச்சுவேலி சென்திரேசா மகாவித்தியாலயம் | மேல்மாடி-படி-2 58' 9'' x 25' 0'' | 150,000.00 |
| 18. | யா/ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை | மேல்மாடி-படி-2 48' 9'' x 25' 0'' | 150,000.00 |
| 19. | சாதனங்கள் நிலையம் (கல்வி, அபிவிருத்தி) — கோப்பாய் — | | 25.000.00 |

[A-836]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "போராளிகளிடையே ஐக்கியத்தை கட்டி வளர்க்க வேண்டும்"

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''குருநகர் மீனவத் தொழிலாளர்கள் மீது அரச படையினர் மேற்கொண்ட வெறித்தனத்தை கடந்த புதன் இரவு வீடியோ தொலைக்காட்சியில் ஒளிபரப்பிவிட்டு வரும் வழியில் யாழ். கச்சேரியடியில் வைத்து எமது தோழர்களைப் பின் தொடர்ந்துவந்த தமிழீழ விடுதலைப்புலிகள், அவர்களை நோக்கி தொடர்ச்சியாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் எமது தோழர்கள் டேவிற்சன், ரமேஸ் ஆகியோர் ஆபத்தான காயங்களுக்கு இலக்காகினர் என்பதை மிகுந்த வருத்தத்துடன் ஈழமக்களுக்கு முறையிடுகின்றோம்.''

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''ஈழத்தின் பல பிராந்தியங்களிலும் எதிரி தனது ஆயுத வன்முறையை கட்டவிழ்த்துவிட்டு எமது மக்களைக் கொன்றொழித்து வருகின்றான். கிளிநொச்சியில் மக்களுக்கேற்பட்டிருக்கும் பேரிழிழப்புகளிலிருந்தும், மண்டைதீவில் நடந்தேறிய குருநகர் மீனவத் தொழிலாளர்களின் படுகொலைகளின் துயரத்திலிருந்தும் நாம் மீள முன்னர் சகிக்க முடியாத இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எம்மைக்கொன்றொழித்து ஈழப்போராட்டத்தை நசுக்கிவிட எதிரி விடாமுயற்சியுடன் செயற்பட்டு வருகின்றான். என்னதான் நவீனரக ஆயுதங்களையும், விமானங்களையும், வெளிநாட்டு ஆலோசனைகளையும் பெற்றாலும் எமது மக்களின் உறுதியான பங்களிப்பும், போராளிகளிடையே வலுவான ஐக்கியமும் இருக்குமாயின் எதிரியை நாம் தோற்கடிப்பது நிச்சயம்.

மனித நேயமற்ற மிருகத்தனமான எதிரியோடு நாம் விடுதலை யுத்தம் நடத்திக்கொண்டு இருக்கின்றோம். ஒருபுறம் ஸ்ரீலங்கா மண்ணும், யு. என். பி. அரசாங்கமும், அதன் கூலிப்படைகளும் இவற்றுக்குத்துணைபோகும் சர்வதேச பிற்போக்கு சக்திகளும் நிற்கின்றன. மறுபுறத்தில் ஈழதேசமும், ஈழமக்களும், விடுதலைப் போராளிகளும் இருக்கின்றன.

எதிரியின் அணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதும் எதிரியை தாக்கி அழிப்பதும் அவனது மண்ணில் அரசியல் ஸ்திரமின்மையை உருவாக்குவதும் எமது போராட்டத்திற்கு அனுகூலமானவை. எமது வெற்றிக்குத்தேவையானவை. மறுதலையாக எமது மண்ணில் நாம் உறுதியான சமாதானத்தை பேணியாகவேண்டும். இதனை சீர்குலைப்பது ஈழப்போராட்டத்திற்குவிரோதமானது. எமது போராளிகளிடையே ஐக்கியத்தை கட்டி வளர்க்கவேண்டும்.

எமது மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட விடுதலையமைப்புகள் தத்தமது சமூகப்பார்வைகளின் அடிப்படையில்இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றன எனவே ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை நிறைவேற்ற ஆயுதபாணிகளாய் நடமாட வேண்டிய தேவைகள் உண்டு. இத்தகைய சூழ்நிலையில் துப்பாக்கியை ஏந்திநிற்கும் எந்த ஒரு பேராளிக்கும் மிகுந்த பொறுப்புணர்வு வேண்டும்.

ஒரு போராளி தன் துப்பாக்கியை இயக்குவதற்கு முன்னால் அதற்குரிய ஒழுங்குகளைகடைப்பிடிக்கவேண்டும். சைகை காட்டுதல், முன்னறிவித்தல் கொடுத்தல், எச்சரிக்கை செய்தல், சந்தேகத்தை நிச்சயப்படுத்திக்கொள்ளல் போன்ற ஒழுங்குகள் ஒவ்வொரு போராளியிற்குமான கட்டுப்பாடாக இருக்கவேண்டும்.

கொடிய எதிரிக்கெதிரான எமது புனித யுத்தத்தில் எமது உன்னதமான தோழர்கள் பலரை நாம் இழந்தோம் இந்த வேதனை எம் நெஞ்சை நெருடிய போதும் நாம் நிலைகுலையவில்லை, இந்த மண்ணில் எவ்வளவு கொடூரம் நிகழ்ந்த போதும் உங்கள் குடும்பத்தில் சாவீடுகளுக்கு குறைந்தது மாதக்கணக்கிலான இடைவெளிகள் ஆவது உண்டு. ஆனால் எங்கள் குடும்பத்தில் - எமது விடுதலை இயக்கத்தில் சாவு அன்றாடம் நடக்கிறது. ஆனாலும் நாம் அழவில்லை. நமது கடமையை விடாப்பிடியாகத் தொடர்கின்றோம்''. (மா)

# புதிய விற்பனை நிலையம்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி திருப்பூர் ஒன்றியம் பொதுமக்களின் வசதி கருதி அங்கு தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் புதிய விற்பனை நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிவமகாராஜா தலைமையில் நடந்த இவ் விற்பனை நிலைய திறப்பு விழாவில் மக்கள்வங்கிப் பிராந்திய முகாமையாளர் திரு மு, கணேசலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து நிலையத்தை திறந்து வைத்தார்.

சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் திரு. வை. சுந்தரலிங்கம் விற்பனையை ஆரம்பித்து வைக்க திரு. இ. வேலும்மயிலும் முதற் கொள்வனவை மேற்கொண்டார்.

வண. ரி. ஈ. தேவராஜன் அடிகள் திரு, சி, இராசதுரை திரு. க. தவலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர். (க)

வேலணை ப. நோ. கூ. சங்கத்தில்

# 11 ஊழியருக்கு திடீர் சுகவீனம்

[வேலணை]

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் புதிய நிர்வாகம் பொறுப்புகளைஏற்றுக்கொண்டதையடுத்து அங்கு கடமையில் இருந்த தலைமைக்காரியாலய உத்தியோகத்தர்கள் பலருக்கு திடீர் சுகயீனம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கு லீவு வழங்குமாறும் புதிய நிர்வாகத்தனருக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இவ் விண்ணப்பங்களை பரிசீலனை செய்த சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு இரா. லோகநாதன், சுகயீன லீவில் நிற்கும் உத்தியோகத்தர்களை உடனடியாக தங்களிடமிருக்கும் பொறுப்புக்களை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தந்திமூலம், கேட்டுள்ளார்.

மேற்படி தலைமைக் காரியாலயத்தில் 19 உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் பொதுமுகாமையாளர், காசாளர், கணக்காளர், இரு தொழிலாளிகள் உட்பட எட்டுப்பேர்கள்தான் கடமைக்கு வந்திருந்தனர். சங்கத்தின் சேவகர், கிராமிய வங்கி முகாமையாளர் உதவியாளர் உட்பட மற்றும் 11 பேர்கள் தங்களது கடமைகளுக்கு வராமல் திடீர் சுகயீன லீவுவழங்குமாறு விண்ணப்பித்திருக்கின்றனர். (க)

# கடற்றொழிலாளர் படுகொலை; இணைப்புக்குழு கண்டனம்

[யாழ்ப்பாணம்]

''தமது நாளாந்த ஜீவனோபாயத்திற்காக தொழில் செய்து கொண்டிருந்த அப்பாவிக்கடல் தொழிலாளர்கள் ஸ்ரீலங்கா இனவாத அரச படையினரால் கற்பனை செய்ய முடியாத வகையில் கொடூரமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். இதனை எந்த நாகரீகம் படைத்த மனித சமுதாயமும் கண்டிக்காமல் இருக்க முடியாது'' குருநகர் கடற்றொழிலாளர் படுகொலை குறித்து தம் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்தின் இணைப்பு குழு பொதுச் செயலாளர் திரு எஸ். விஜயானந்தன் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது இந்த கொலைகளையிட்டு தமிழ் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கெதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு தனது கண்டனத்தையும் எச்சரிக்கையையும் ஸ்ரீலங்கா அரசிற்கு தெரிவித்துக்கொள்கின்றது.

தந்தையை இழந்த தனயனை இழந்த, சகோதரனை இழந்த, உழைப்பாளர்களை இழந்த, மீனவத் தொழிலாளர் குடும்பத்திற்கு இணைப்புக்குழு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அரக்கத்தனமான அரசின் இச் செயல்களுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெள வேண்டிய காலம் வந்து விட்டதென்பதையே இச் சம்பவம் காட்டி நிற்பதாக இணைப்புக்குழு கருதுகின்றது.

# கிளிநொச்சி கல்வி அலுவலகம் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டக் கல்வித் திணைக்களக் காரியாலயம் பளை மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டக் கல்வித்திணைக்கள ஊழியர்கள் இன்று பளை மகாவித்தியாலயத்திலுள்ள கல்வித் திணைக்களத்திற்குச் சமூகமளிக்குமாறும், கல்வித் திணைக்களம் மேற்பார்த்து பளை மகா வித்தியாலயம் என்ற முகவரிக்குத் தற்காலிகமாகக் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அதிபர்கள் தொடர்புகொள்ளுமாறும் ஜனாப் எம். எம். மன்சூர் அவ்வறிவிப்பில் கேட்டுக்கொண்டுள்ளார். (வா)


பவர்ஸ் உரம்

ஒப்பற்றது

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

ரூபா 2,000/-க்குப் மேல்

MASTERS ABC 4/82 (A)


# இன்றைய பலன்

மாதம்- வைகாசி
தி.தி- 31 (14 - 6 - 1986)
கிழமை- சனி
திதி- ஸப்தமி
பி. இ. வரை
நக்ஷத்திரம்- மகம்
காலை 6. 44 ன்மேல் பூரம்

மேடம்: இறைவழிபாடு மேலிடும். இதன்மூலம் இல்லத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு ஆதரவு தருவார்.

இடபம்: உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் உகந்தநாள். கவர்ச்சிகரமான பொருள்களை வாங்குவதிலும் அதிக கவனம் செலுத்துவீர்கள்.

மிதுனம்: புதுமையான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு அதிஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு விருந்தினர்கள் வருகை உங்களை மகிழச்சியில் ஆழ்த்தும்.

கடகம்: நடையில் தயக்கம் ஏற்படும். உங்கள் விடயததில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படும்.

சிங்கம்: தொழில் புரியுமிடத்தில் கருத்து வேற்றுமை தோன்றக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம். எதிரிகளைத் தேடிக் கொள்வீர்கள்.

கன்னி: கணிப்புத்திறமையால் பெரும் புகழ் கிடைக்கும் பெரிய இடத்து சகவாசம் உங்களுக்கு செல்வாக்கை தேடித்தரும். அதிர்ஸ்டமான தினம்.

துலாம்: உடல் நலம் சிறிது பாதிக்கப்படும். வைத்திய வழிகளில் பணம் செலவாகும். சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

விருச்சிகம்: வாகனம் செலுத்துவோர் இன்று நன்மதிப்பு பெறுவர். தாய்வழி தனவரவிற்கும். இடமுண்டு. முன்னேற்றமான தினமாகும்.

தனுசு: இதயத்தின் ஏக்கம் இன்று தணியும் தேடிய பொருள் காலடியில் கிடைக்கும். நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

மகரம்: பகை மூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். சிறிய விடயத்திற்கு கூட குறைகேட்க நேரிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

கும்பம்: தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும். குடும்பத்தில் தென்றல் வீசும். சுவையான நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மீனம்: அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரும். மறைமுக எதிரிகள் உளவு வேலை பார்ப்பர் தன்னையே தனக்குதவியென்று செயலாற்றவும்.

திருமலை ரவீந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 14-6-86

# "படகுக்குள்ளும், கடலுக்குள்ளும் இரத்தக்காயங்களுடன் சடலங்கள் கிடந்தன"

## மரண விசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''படகுக்குள் உதயகுமார், ஈஸ்வரன், சாமி உட்பட ஏழு எட்டுப்பேரின் சடலங்கள் கிடந்தன. கடலுக்குள்ளும் சடலங்கள் காணப்பட்டன. கரையில் நின்றவர்களின் உதவியுடன் சடலங்களை எங்கள் படகில் குருநகர் இறங்கு துறைக்கு ஏற்றிவந்தோம்.''

தீவுப்பகுதி கடற்கரையில் பலியான குருநகர் கடற்றொழிலாளர்கள் 30 பேரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த குருநகரைச்சேர்ந்த அ. ஆனந்தன் இவ்வாறு கூறினார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதவான் கே. வி. எஸ். வரதரராசா முன்னிலையில் நேற்றுக் காலை இம்மரணவிசாரணை நடைபெற்றது.

இறந்தவர்களின் நலனைக் கவனிக்கும் பொருட்டு சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் ஆஜரானார்.

அ. ஆனந்தன் மேலும் கூறியதாவது:- ''சம்பவதினம் மீன்பிடிப்பதற்காக 11மணிக்கு தீவுப்பகுதிக்கு படகில் சென்றோம் நிக்கிலஸ், கிறிஸ்டினும் வந்தார்கள். நாங்கள் சென்றபோது அங்கு கரைக்கு சமீபத்தில் காலையில் கரைவலை போடச் சென்ற படகு நிற்பதை பார்த்தோம். எவரையும் காணவில்லை. அருகில் போன படகில் ஏழெட்டு சடலங்கள் இரத்தக்காயங்களுடன் கிடந்தன: கடலுக்குள்ளும் சடலங்கள்கிடந்தன.

பின் கரையில் நின்றவர்களைக் கூப்பிட்டு அவர்களின் உதவியுடன் சடலங்களை எங்கள் படகில் ஏற்றி குருநகருக்குஏற்றிகொண்டுவந்தோம் குருநகர் இறங்குதுறையிலிருந்துசன சமூக நிலையத்தில்ஒப்படைத்தோம்''

சி. நிக்கலஸ், செ. கிறிஸ்டின், ஆகியோரும் சாட்சியமளித்தனர். (க)

### பல்கலைக்கழக மெய்வல்லுநர் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்தில் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி இன்றும் நாளையும் நடைபெறுகின்றன. பரிசளிப்பு விழாவும் நாளை பிற்பகல் நடைபெறும். [வி]

### மனையியல் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

மனையியல் கண்காட்சி இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு யாழ். விக்ரோறியா வீதியிலமைந்துள்ள ஜி. எஸ், லேடீஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி, வி. கே. சிவஞானம் இன்றுகாலை 8-30 மணியளவில் இக்கண்காட்சியை திறந்துவைக்கவுள்ளார், அன்னையர் முன்னணி தலைவி செல்வி புஷ்பா செல்வநாயகம் மங்கள விளக்கேற்றி வைப்பார். (மா)

# குடாநாட்டைக் கட்டுப்படுத்தும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் தாக்குதல் ஆகியவற்றிற்கும் அதைவிட அபாயகரமான ஆகாயத்தாக்குதலுக்கும் மாற்றப்பட்டது

### விமானக் குண்டு வீச்சு

மே மாதம் 19ம் திகதி விமானப்படை சனநெருக்கடி மிக்க யாழ். நகரைக் குண்டு வீசித் தாக்கியது வட பகுதியின் முக்கிய நிலையங்களில் ஒன்றுன 1100 கட்டில் கொண்ட யாழ். வைத்தியசாலையும் இதனுல் சேதமடைந்ததுடன், ஹெலிகொப்டரிலிருந்து சுடப்பட்ட சன்னங்களும் கூரையைப் பிய்த்துக்கொண்டு வந்ததைக் கண்ட நோயாளிகள் பயத்துடன் ஓடியதைக் காணக் கூடியதாகவிருந்தது. நான்கு நாட்களின் பின்னர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை ஊழியர்கள் ஊர்வலம் நடத்தினர்.

அதன்பின்னர் குடாநாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியில் (வல்வை உட்பட) குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

### படையினரின் பயமுறுத்தல்

ஆஸ்பத்திரித் தாக்குதலின் பின்னரும் நகரின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள 'சென்றிகள்' அகற்றப்படாவிட்டால் குண்டு வீச்சு மேலும் தொடரும் என்ற அச்சுறுத்தலுடன் குண்டுகள் மேலிருந்து விழுந்தன.

### தமிழரின் பலவீனம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ராணுவத்தினரைத் தரையில் நிலைகுலையச் செய்யக் கூடியதாயிருந்தாலும் இலங்கை விமானப் படையினரின் ஆகாயத் தாக்குதலை எதிர்க்க முடியாமலுள்ளது. கீழாகப் பறக்கும் ஹெலிகொப்டர்கள்மீது சுடமுடியுமாயினும் குண்டுகளை வீசும் விமானங்கள் மீது சுடமுடியாது. இது ஆகாயத் தாக்குதலுக்குத் தமிழரைத் தவிர்க்க முடியாதபடி பலியாகவைத்துள்ளது.

அரசின் இந்தத் தாக்குதலினுல் பலியான பொதுமக்கள் எண்ணிக்கை 75க்கு மேல் எனக் கருதப்படுகிறது.

குடாநாட்டின் கிழக்குக் கரையோர குண்டுவீச்சானது குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள துருப்பினரை இணைக்கும் முயற்சியினை இன்னும் இலங்கை ராணுவம் முடிக்கவில்லை என்பதைககாட்டுவதுடன் இந்தத்தந்திரத்தை 'தமிழீழ விடுதலைப் புலி'களின் சக்தியே தடுக்கிறது என்பதையும் காட்டுகிறது.

உதாரணமாக மே 23ல் ஆனையிறவு முகாமைவிட்டு வெளியேறிய ராணுவத்தின வாடியடியில் எல் ரி. ரி. ஈ. கெரில்லாக்களுடனுன தாக்குலின்பின் பின்வாங்கின அதேதினத்தில் பருத்தித்துறை நோக்கிச்செல்ல முயன்ற துருப்பினரை சுமார் 50 கி. மீ. (33 மைல்) தூரத்திலுள்ள கட்டைக்காடு எனுமிடத்தில் வைத்து பின்வாங்கச் செய்யவும் போராடினர்.

இதேவேளை வசாவிளானிலும், யாழ் பழைய பொலிஸ் நிலைய கட்டிடத்திலும் இராணுவத்தினரை சுற்றிவளைத்த எல். ரி. ரி. ஈ. போராளிகள் இராணுவத்தினருக்கான வெளிதொடர்புகளைதுண்டித்துள்ளனர் என அவர்கள் கூறுகின்றனர்.

### குடாநாட்டில் புதியமுகாம்கள்

த. வி. கூ. பிரமுகர் திரு. அமிர்தலிங்கத்தின் கூற்றுப்படி இலங்கை இராணுவம் குடாநாட்டில் பல புதிய இராணுவ முகாம்களை அமைக்கவுத்தனிப்பதுடன் முகாம்கள் இல்லாத இடத்தில் தாக்குதலை நடத்துவதன் பொருட்டு ஒவ்வொரு முகாமைச்சுற்றியும் ஒரு சூனியப் பிரதேசத்தை (No Man's Land) உருவாக்கப் பார்க்கிறது.

### டெல்லியின் கவலையும் இலங்கையின் புறக்கணிப்பும்

குடாநாட்டில் நடைபெற்ற இந்த சண்டையும் பலியாகிய பொதுமக்கள் எண்ணிக்கையும் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதமும் பற்றி அறிந்து பெரும் கவலையுற்ற இந்தியா ராஜதந்திர வட்டாரங்கள் மூலமும் வெளி விவகார அமைச்சின் அறிக்கை மூலமும் இலங்கை அரசின் இந்த ராணுவ நடவடிக்கைக்கு தனது அதிருப்தியைக்காட்டியது.

ஆயினும் இந்த கண்டனங்கள், தொடரும் ராணுவத் தாக்குதலில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. ''ஒருவகையில் இந்த தாக்குதல்கள் இந்தியாவுக்கு ஒரு சவாலாக நடத்தப்பட்டது எனக் கூறலாம்'' எனப் பாலகுமார் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசு. இந்தியாவின் சமாதான முயற்சிகளுக்கு எதிராயுள்ளது '' திரு. அமிர்தலிங்கமும் ஏறக்குறைய இதையே தான் பிரதிபலிக்கிறுர். அத்துடன் இலங்கை அரசின் அண்மைய அறிக்கைகள் படி இலங்கை குற்றவாளிக்கூட்டில் நிறுத்தப் பார்க்கிறது எனவும் அவர் கூறினுர். (மச)

### ஒக்ஸ்பாம் உதவியுடன் உடுபுடவைகள்

வவனியா மாவட்டத்தில் கலவரத்திஞல் பாதிக்கப்பட்டு அகதிகளாக நண்பர்கள், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு உடுபுடவை வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒரு குடும்பத்தினருக்கு 250 ரூபா பெறுமதியானபுடவைப் பொட்டலம் வழங்கப்படுகின்றது.

வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனமான ஒக்ஸ்பாம்நிறுவனம் வவனியாவில் உள்ள இப்படியான அகதிகளுக்கு உதவ ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபாவினை வழங்கி இருந்தமை இங்குகுறிப்பிடத்தக்கது

தெற்குத்தமிழ்ப்பிரிவு உதவி அரச அதிபர் திரு. கே ஐயப்பிள்ளை இத்தகவலை தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

### இ. அந்தோனிப்பிள்ளை

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இ. அந்தோனிப்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் மேரியோசேப்பின் அன்புக் கணவரும், ஜெறோம் [சவுதி அரேபியா], அல்போன்ஸ் [சவுதி அரேபியா], பி ஞானமலர், அ. மரியமலர் ஆகியோரின் அன்புத்தந்தையும், சூ பிரான்சிஸ், சூ. அகஸ்ரின், அ. ஜெஸ்ஸி ஆகியோரின் அன்பு மாமனுரும், அருளானந்தம், மரியம்மா, அருள்பிரகாசம், லூர்த்தம்மா, விசிறிஸ்ரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ம. யோன், ம. அருளானந்தம், சி. திரேசம்மா ஆகியோரின் அன்பு மைத்துணருமாவர் அன்னுரின் பூதவுடல் இன்று (சனி) பிற்பகல் 2-00 மணிக்கு ஆனைக்கோட்டை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

# மரண அறிவித்தல்

### R. S நதானியேல்

இளைப்பாறிய தபால் அதிபர் திரு. ரொபேட் செபரத்தினசிங்கம் நதானியேல் அவர்கள் காலமானுர். இவர் காலஞ்சென்ற அரியமலரின் அன்புக்கணவரும், அரியரத்தினம், ரஞ்சிதராணி, செல்வராணி ஆகியோரின் அன்புத்தந்தையும், ரஞ்சினி, காலஞ்சென்ற A.V. நவரத்தினசிங்கம். வணபிதா J. N. ஜெயசந்திரன் [சபைக்குரு, கோப்பாய்], ஆகியோரின் அன்பு மாமனுரும், தேவரஞ்சன், சுரேஷ், ரொமேஷ், தேவபிரியன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் நல்லடக்க ஆராதனை 14-6-86 சனிக்கிழமை 3-30 மணியளவில் கோப்பாய், பரி. கன்னி மரியாள் ஆலய குருமனையில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பரி. கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குருமனை, பரி. கன்னி மரியாள் ஆலயம், கோப்பாய்.

[C 2857]

### திரு. அப்பாபிள்ளை சுப்பிரமணியம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த அப்பாபிள்ளை சுப்பிரமணியம் [கொக்குவில் மணியம்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும, சிறீஸ்கந்தராசா (சவூதிஅரேபியா), விஜயகுமாரன் [விஜயன்], சாந்தகுமாரன், (ஜேர்மனி) ஆகியோரின் அன்புக்தந்தையும் ஆவார். சந்திராதேவி பத்மராணி ஆகியோரின் அன்புமாமனுமாவார். அன்னுரது ஈமக்கிரியைகள் அளவாவோடை ஏழாலை மேற்கிலுள்ள மகனின் இல்லத்தில் (14-6-86) இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைகளுக்காக ஏழாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றுர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்; சு. விஜயகுமாரன் [விஜயன்]

(C 2862)

### திரு. கு. சோமசுந்தரம் (H Q I)

புலோலி மேற்கைச் சேர்ந்த திரு. கு. சோமசுந்தரம் [யாழ். தலைமைக் கூட்டுறவு காரியாலயம் [ 11-06-86 அன்று காலமானுர். இவர் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், சுகுமார் [U K]. நந்தினி [விரிவுரையாளர் நுண்கலைப் பிரிவு, யாழ் பல்கலைக்கழகம்] நளினி [ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], விஜயகுமார் [ஆசிரியர், வேம்படி மகளிர் கல்லூரி], ஜெயக்குமார் [U.K], சாந்தினி [மாணவி - யாழ் பல்கலைக் கழகம்], மாலினி, நவநீதகுமார், விஞேதினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், நவரட்ணசாமி, தங்கரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், T. கணபதிப்பிள்ளையின் மைத்துனரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 12-06-86 அன்று நடைபெற்றது. உற்றுர், உறவினர்' நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

[C 2865]

### வேலுப்பிள்ளை சின்னராசா (வயாவிளான்)

வேலுப்பிள்ளை சின்னராசா வெள்ளி அதிகாலை சிவபதமடைந்துவிட்டார். இவர் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், சிந்தாதேவி, சற்குணதேவி, சரோசினிதேவி [வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்], செல்வேந்திராதேவி, சர்வேந்திரராசா [மேற்கு ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநெல்வேலி ஆறுமுகம் கந்தசாமியின் அன்பு மாமனுருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் திருநெல்வேலி சமராவளவில் (14-6-86) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றுர், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ஆ. கந்தசாமி, திருநெல்வேலி.

(C 2867)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org